**முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், நாமக்கல்**

**முன்னிலை:- திரு எஸ்.பிரபா சந்திரன், B.L.,**

**முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, நாமக்கல்**

**2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ம் நாள் வெள்ளிக்கிழமை**

**(திருவள்ளுவராண்டு 2055, குரோதி வருடம் ஐப்பசி மாதம் 29 ம் தேதி)**

**I.A.No.3/2024 in O.S.No.188/2023**
**(CNR No. TNNM01-001680-2023)**

பெரியசாமி ..... மனுதாரர்/வாதி

-எதிராக-

நவீன்குமார் .....எதிர்மனுதாரர்/பிரிதிவாதி

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு 06.11.2024 ம் தேதியன்று கொண்டுவரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.பெரியசாமி அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.கிருஷ்ணப்பன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும்...

**உத்தரவு**

எதிர்மனுதாரர்/பிரதிவாதியை நீதிமன்றத்தில் ஆஜராகவும் மேற்படியாரின் இடது கை பெருவிரல் ரேகையை நீதிமன்றத்தார் முன்னிலையில் எடுத்து அதனை தாவா புரோநோட்டில் உள்ள கைரேகையுடன் ஒப்பிட்டு பார்க்க வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமித்து அதனை சென்னையில் உள்ள அரசு கைரேகை பரிசோதனை நிலையத்திற்கு எடுத்து சென்று ஒப்பிட்டு நிபுணரின் அறிக்கை பெற்று வர உத்திரவிட கோரி சாட்சியச்சட்டம் பிரிவு 45 மற்றும் கட்டளை 26 விதி 10(ஏ)ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்-**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கானது எதிர்மனுதாரர் மீது தாவா பிராமிசரி நோட்டின் பேரில் தொகை கிடைக்கக்கோரி வாதி இந்த அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி மனுதாரரிடம் கடந்த

28.12.2022ம் தேதியில் எவ்வித புரோநோட்டு பத்திரமும் கொடுத்ததில்லை என பதிலுரை தாக்கல் செய்துள்ளார். தாவா புரேநோட்டில் உள்ள கைரேகை பிரதிவாதியுடையது என நிரூபணம் செய்ய வேண்டியுள்ளது. எனவே எதிர்மனுதாரர்/பிரதிவாதியை நீதிமன்றத்தில் ஆஜராகவும் மேற்படியாரின் இடது கை பெருவிரல் ரேகையை நீதிமன்றத்தார் மன்னிலையில் எடுத்து அதனை தாவா புரோநோட்டில் உள்ள கைரேகையுடன் ஒப்பிட்டு பார்க்க வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமித்து அதனை சென்னையில் உள்ள அரசு கைரேகை பரிசோதனை நிலையத்திற்கு எடுத்து சென்று ஒப்பிட்டு நிபுணரின் அறிக்கை பெற்று வர உத்திரவிட கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையின் சுருக்கம்–</u>

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. உடனடியாக தள்ளுபடியாகத்தக்கது. அசல் வழக்கானது மனுதாரர்/வாதி தரப்பில் ஒரே ஒரு புரோநோட்டை மட்டும் தாக்கல் செய்துவிட்டு மிகப்பெரிய தொகையான ரூ.20,00,000/–த்தை கடனாக கொடுத்துள்ளதாகவும், அதற்குண்டான வட்டியையும் சேர்த்து கொடுக்க வேண்டுமென்று எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/பிரதிவாதி அவர்களும் சி.பு.கோ.ஆர்டர் 8, ரூல் 1 மற்றும் 2 ன்படி எதிர்வழக்குரையை முறையாக தாக்கல் செய்துவிட்டார். இவ்வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள புரோநோட் குறித்து, அதிலுள்ள கையெழுத்து மற்றும் கைரேகை குறித்து தனது சந்தேகத்தை எதிர்மனுதாரர்/பிரதிவாதி எழுப்பியுள்ள நிலையில் மனுதாரர்/வாதி அவர்கள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். இது ஒரு முன்கூட்டிய பருவமில்லா மனுவாகும். மேலும் இம்மாதிரியான மனுவை தாக்கல் செய்வதற்கு யாதொரு வியாஜ்ஜியமூலமும் தற்போதைய நிலையில் ஏற்படவில்லை. இவ்வழக்கில் சம்மந்தப்பட்டுள்ள புரோநோட் எழுதப்பட்ட விவரங்களையும், கையெழுத்திடப்பட்டு பணம் கைமாறிய விவரங்களையும் மனுதாரர்/வாதி அவர்களே தகுந்த ருசு கொண்டு ஐயமற நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். இந்நலையில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது அந்த நிரூபிக்கும் சுமையை மனுதாரர்/வாதி அவர்கள் சுமத்த இயலாது. இவ்வாறான மனுவிற்கான நேரம் இதுவல்ல. வழக்கு

விசாரணையின்போது, வழக்கின் போக்கை தெரிந்து கொண்டு இவ்வாறான மனுவிற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும். ஆகவே மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென எதிர்உரையில் சொல்லப்பட்டுள்ளது.

4) மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் இல்லை.

5) <u>மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதை தீர்மானம் செய்ய வேண்டியுள்ளது.</u>

<u>தீர்வு–</u>

6) மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதுரையின்போது, அசல் வழக்கானது தாவா பிராமிசரி நோட்டின் அடிப்படையில் தாவா தொகைக்கும், பின் வட்டி மற்றும் செலவுத் தொகைக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் இந்த எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் தாவா பிராமிசரி நோட்டு உண்மையானதல்ல என குறிப்பாக மறுக்கப்பட்டுள்ளது. அப்படியிருக்க தாவா பிராமிசரி நோட்டில் உள்ள கையொப்பமும், கைரேகையும் பிரதிவாதியினுடையதுதான் என்பதை வாதி நிரூபணம் செய்ய வேண்டியுள்ளது. அவ்வாறு நிரூபணம் செய்தால் தான் வாதிதரப்பு வழக்கை நிரூபணம் செய்ய இயலும். ஆகவே எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் கைரேகையை திறந்த நீதிமன்றத்தில் பெற்று தாவா பிராமிசரி நோட்டிலுள்ள பிரச்சனைக்குரிய கைரேகையுடன் ஒப்பிட்டு பார்த்து நிபுணரின் அறிக்கை பெறவேண்டியது அவசியமானது என்பதால் இம்மனுவை அனுமதிக்க வேண்டுமென வாதிட்டார்.

7) எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதுரையின்போது, தாவா பிராமிசரி நோட்டு உண்மையானதல்ல. தாவா பிராமிசரி நோட்டு உண்மையானது என்பதை நிரூபணம் செய்யும் பொறுப்பு வாதியின் மீதே உள்ளது. தாவா பிராமிசரி நோட்டிலுள்ள கைரேகையை பரிசோதனை செய்ய தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது Pre matured மனுவாகும். வழக்கின் போக்கை தெரிந்து கொண்டு இவ்வறான மனுவிற்கு அனுமதி வழங்கவேண்டும். ஆகவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென வாதிட்டார்.

8) அசல் வழக்கானது 28.12.2022 தேதியிட்ட தாவா பிராமிசரி நோட்டின் அடிப்படையில் பிரதிவாதியிடமிருந்து தாவா தொகைக்கும், பின்வட்டி மற்றும் செலவுத் தொகைக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு அசல் வழக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா பிராமிசரி நோட்டு உண்மையானதல்ல என பிரதிவாதியின் எதிர்வழக்குரையில் குறிப்பாக மறுக்கப்பட்டுள்ளது. ஆகவே தாவா பிராமிசரி நோட்டிலுள்ள கையொப்பம் மற்றும் கைரேகை பிரதிவாதியினுடையதல்ல என மறுத்து எதிர்வழக்காடப்படுகிறது என்பது தெரிய வருகிறது. மேலும் வாதியிடம் இந்த பிரதிவாதி எந்தவொரு காலத்திலும் யாதொரு தொகையும் கடனாக பெற்றுக்கொண்டு தாவா பிராமிசரி நோட்டை எழுதிக்கொடுக்கவில்லை என குறிப்பிட்டு எதிர்வழக்காடப்படுகிறது. ஆகவே வாதிதரப்பு வழக்கை நிரூபணம் செய்ய தாவா பிராமிசரி நோட்டிலுள்ள கைரேகை பிரதிவாதியினுடையதுதான் என்பதை நிரூபணம் செய்யும் வகையில் பிரதிவாதியின் கைரேகையை தாவா பிராமிசரி நோட்டிலுள்ள கைரேகையுடன் ஒப்பிட்டு பார்த்து கைரேகை நிபுணரின் அறிக்கை பெற கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா பிராமிசரி நோட்டு பிரதிவாதியால் எழுதிக்கொடுக்கப்பட்டதல்ல என குறிப்பாக மறுக்கப்பட்டுள்ளதால் தாவா பிராமிசரி நோட்டிலுள்ள கைரேகை இந்த பிரதிவாதியினுடையதா என்பதை தீர்மானிப்பது அசல் வழக்கில் பிரச்சனைக்குரிய சங்கதிகளை தீர்மானிக்க அவசியமானதாக உள்ளது. இம்மனு அனுமதிக்கப்பட்டு கைரேகை நிபுணரின் பரிசோதனைக்கு அனுப்பப்படுவதால் வழக்கின் உண்மை நிலையை தெரிந்து கொள்ளும் நிலை ஏற்படும். இது இருதரப்பினர்களின் வாய்மொழி சாட்சியத்தையும் வெகுவாக குறைக்கவும், தாவா பிராமிசரி நோட்டு பற்றிய உண்மை தன்மையை அறிந்துகொள்ளவும் இந்நீதிமன்றத்திற்கு உதவியாக இருக்கும். ஆகவே அசல் வழக்கை தீர்மானிக்க தாவா பிராமிசரி நோட்டிலுள்ள கைரேகை பிரதிவாதியினுடையதா என்பதை தீர்மானிப்பது அவசியமானதாக உள்ளதாலும், நீதியின் நலன் கருதியும் இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்திரவிடப்படுகிறது.

9) முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்திரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையராக வழக்கறிஞர் திருமதி.என்.லட்சுமி அவர்கள் நியமிக்கப்படுகிறார். தாவா பிராமிசரி நோட்டையும், ஒப்புக்கொள்ளப்பட்ட பிரதிவாதியின் கைரேகையையும் சென்னை தடய அறிவியல் துறை நிபுணர் பரிசோதனை செய்து அறிக்கை வழங்க ஏதுவாக மேற்படி ஆவணங்களை இந்நீதிமன்றத்திலிருந்து மூடி முத்திரையிட்ட தபால் உறை மூலம் நீதிமன்ற ஆணையர் பெற்று சென்று அதனை சென்னை தடய அறிவியல் துறையில் ஒப்படைத்து பின்னர் மீண்டும் மேற்படி ஆவணங்களையும், நிபுணரின் அறிக்கையையும் பெற்று வந்து இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் ஊதியம் ரூ.12,000/-ம் என நிர்ணயிக்கப்படுகிறது. மேற்படி நீதிமன்ற ஆணையரின் ஊதியத்தை மனுதாரர்/வாதி நீதிமன்ற ஆணையரிடம் நேரடியாக வழங்க வேண்டுமென்றும், தடய அறிவியல் துறை நிபுணர் மேற்படி ஆவணங்களை ஆய்வு செய்வதற்கான கட்டணத்தை மனுதாரர்/வாதி நீதிமன்ற ஆணையர் மூலம் சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில் செலுத்த வேண்டுமென்றும் உத்திரவிடப்படுகிறது. அழைக்க 26.11.2024.

இந்த உத்திரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் உடனுக்குடன் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2024 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 15 ம் நாள் என்னால் அவையறிய உத்திரவு பகரப்படுகிறது.

sd/-S.Prabha Chandran

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

நாமக்கல்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்- இல்லை.</u>**

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்- இல்லை.</u>**

sd/-S.Prabha Chandran

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

நாமக்கல்.